RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2177

OPEN ACCESS

# மொழியும் வாழ்வும்

ச. அவ்வை [அ, *]

[அ] தமிழ் உயராய்வு மையம், பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600030, தமிழ்நாடு, இந்தியா.

# Language and Life

S. Avvai [a, *]

[a] Department of Tamil, Pachaiyappa's College, Chennai-600030, Tamil Nadu, India

* Corresponding Author: savvaishanmugam@gmail.com

Received: 19-08-2022
Revised: 30-09-2022
Accepted: 07-10-2022
Published: 15-11-2022

Check for updates

## ABSTRACT

This article explores the relationship between the origin of language and the origin of the society in which the language operates and reveals the relationship between language and humans. Language plays an important role in social interaction. Change and development in a language and socio-economic changes affect language. Language also contributes to the economic factors that underpin society. The place of language in a society can be traced by tracing the changes it has undergone from prehistoric times to modern times. In every societies change takes place and nothing is table in a society. If the society doesn't change it will perish very shortly. In the same way, the language used in the community should also adapt and grow. Otherwise there cannot be a language. Many countries like China which are self-proclaimed in economic activities gives more importance to their mother tongue. In Tamil Nadu except communication sector Tamil language plays a special role in economic activities in all sectors. This article tries to prove that when mother tongue education is given importance, Tamil language also will be recognised all over the world.

**Keywords:** Society, Language, Relationship, Origin

## முன்னுரை

இரண்டு, இரண்டுக்கு மேற்பட்ட மனிதர்கள் சேர்ந்து வாழ்வது சமூகம். சமூகத்தில் அவர்களுக்குத் தேவையான உணவு, உறைவிடம், உடைகள், கலை, அறிவியல், மொழி அனைத்தும் அம் மனிதர்களால் உருவாக்கப்பட்டிருக்கும். இவற்றைச் சேர்ந்து செய்வது சமூகம் எனப்படுகிறது. மேலும் இவற்றைச் சமூகத்தால் தான் செய்ய இயலும். தனிமனிதனால் எதையும் செய்ய இயலாது. கூட்டு மனிதனின் கூட்டுச் சக்திதான் சமூகமாகும். மொழி இந்த சமூகத்தின் விளை பொருளாகும். அம்மனிதர்களின் அன்றாட நடவடிக்கைகளில் இருந்து உருவானது. அதே சமயம் அம்மனிதர்களின் அன்றாட வாழ்க்கையை மொழி மாற்றுகிறது. இங்ஙனம் மனித வாழ்வில் மொழி ஆற்றும் பங்களிப்பு இன்றியமையாதது. இவ் ஆய்வேட்டில் மொழி என்ற சொல் தமிழ் மொழியையும் சமூகம் என்ற சொல் தமிழ்ச் சமூகத்தையும் சுட்டி நிற்கிறது.

## மொழியின் தோற்றம்

மொழியின் தோற்றம் குறித்து மேலை நாட்டு அறிவியல் ஆய்வாளர்கள் தங்களது கருத்துக்களை வெளியிட்டுவிட்ட போதிலும் தமிழில் தற்காலத்திற்கு முன்பு வரை அது கடவுளர்களின்

அருள் என்று கருதும் போக்கு இருந்து வந்துள்ளது. தமிழர்களின் இக்கருத்தைப் பற்றி சூரியநாராயண சாஸ்திரி பின்வருமாறு கூறுகிறார்.

வடமொழியை பாணிநிக்கு வகுத்தருளி யதற்கிணையாகத் தொடர்புடைய தென்மொழியைத் தொடுகடல்சூழ் வரைப்பதனிற் குடமுனிக்கு வற்புறுத்தார் கொல்லேற்றுப் பாகர் எனவும், இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர் எனவும் முந்தையோர் கூறியிருத்தலையுங் காண்க (Suryanarayana Sastri, 2003).

தமிழ் மக்கள் மற்றும் ஆய்வாளர்களின் நிலை குறித்த இவரது கூற்று தற்காலத்தில் மாற்றம் கண்டு வருகிறது. மொழிக்கு அடிப்படை சமூகம் எனில் மொழியின் தோற்றத்தை சமூகத்தின் தோற்றத்தோடு ஒருங்கு வைத்து ஆராய வேண்டும் என்கிற தெளிவு ஆய்வாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

சிறிய அளிவிலான உற்பத்தி செயல்பாட்டிற்கும் இரண்டு மனிதனின் இணைவு அவசியம். இங்ஙனம் பெரும் அளவிலான மனிதர்களின் இணைவு சமூக வாழ்வாக மாறுகிறது. இந்த வளர்ச்சி மொழிக்கான தேவையை உருவாக்குகிறது. தொடக்க கால உற்பத்தி நடவடிக்கைகளோடு மொழிக்கான தோற்றமும் அமைகிறது. மொழியின் தோற்றம் மனித உழைப்போடு தொடங்குகிறது. இதனைப் பின்வரும் கூற்று விளக்குகிறது.

உழைப்பிலிருந்தும் அதனுடைய மாற்றப் போக்கிலிருந்தும் மொழியின் பிறப்பை விளக்குவது ஒன்றே சாலவும் பொருத்தமுடையது என மிருகங்களுடன் ஒப்பிட்டு நோக்குங்கால் ருசுப்பிக்கப்பட்டது (Firaterik Engels, 2005).

மனிதன் உழைக்கத் தொடங்கிய காலம் தான் அவன் பேசத் தொடங்கிய காலமும் என்பதால் மொழியின் தோற்றத்திற்கு அடிப்படையாக இருந்தது உழைப்பு என்பதை இக்கூற்று விளக்குகிறது. ஒருவர் பேசுவது ஒருவருக்கு புரிவது என்பது அம்மக்களுக்கு இடையே உறவு இருப்பதை உணர்த்துகிறது. இந்த உறவு மொழியின் வழியாக வெளிப்படுகிறது. இதனைப் பின்வரும் கூற்று புலப்படுத்துகிறது.

பொருள் உற்பத்தியில் சேர்ந்து கொண்ட மனிதன், மனிதர்களுக்கிடையில் உள்ள உறவை உணர்கின்றவனாகவும், அறிகின்றவனாகவும் உள்ளான். மொழி இந்த மனித உறவைப் புலப்படுத்துகிறது.

மக்கள் ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ளும் தேவையில் உள்ளனர். மனிதன் பிற மனிதர்களுடன் தொடர்பு கொள்வதன் வாயிலாகத்தான் சமூகமாகிறான். அந்தத் தொடர்பு மொழியினால் ஏற்படுகிறது.

பலர் சேர்ந்து ஒரு சமுதாயமாய் ஓர் இனமாய் பழகி வாழ்வதற்குத் துணையாக உள்ள சிறந்த கருவி மொழியே. பலர் ஓர் இனமாய் வாழ்கின்றனர் என்பதற்கு உண்மையான அறிகுறி அவர்களின் நிறம் முதலிய எவையும் அல்ல. அவர்கள் பேசும் மொழியே அறிகுறி எனலாம் (Varadarajan, 1954).

சமூக வாழ்வு மொழியுடன் பின்னி பிணைந்துள்ள நிலையை மேற்கண்ட கூற்று விளக்குகிறது. மொழியைச் சமூகத்தில் இருந்து பிரிந்து ஆராய்வது மொழியைக் குறித்தும், சமூகத்தைக் குறித்தும் அறிய சிறதளவும் உதவாது என்பதை அறிஞர்கள் வலியுறுத்தி வந்துள்ளனர்.

சமூக இயக்கத்தின் அடித்தளத்தில் பொருளாதாரம் உள்ளது. இதன் மேல்தான் மொழி, கலை, அறிவியல் போன்ற சமூக நடவடிக்கைகள் நிலை கொண்டுள்ளன. இந்தப் பொருளாதார அடிப்படையை ஒட்டித்தான் மொழி முதலிய அனைத்தும் செயல்படுகின்றன. ஒரு பகுதியில் என்ன மொழி பேசப்பட வேண்டும் என்பதை வரலாற்று வழியில் பொருள் உற்பத்தி தீர்மானிக்கிறது. இதனைப் பின்வரும் கூற்று உறுதி படுத்துகிறது.

குறிப்பிட்ட ஒரு நாட்டில், வாணிப உறவுகளின் நலன்களை முன்னிட்டு எந்த மொழி தெரிந்திருந்தால் பெரும்பாலோருக்கு அநுகூலமாய் இருக்கும் என்பதைப் பொருளாதாரப் பரிவர்த்தனையின் தேவைகள் தாமாகவே தீர்மானித்துக் கொண்டுவிடும் (Lenin, 2017).

எனில், மொழி பேசும் மனிதர்கள், மொழியைப் பேச வேண்டும் என்பதற்காக தன் விருப்பத்தின் பேரில் பேசுவதில்லை. அவர்கள் மொழியை வைத்து ஒரு செயலைச் செய்கிறார்கள்.

ஒரு மொழியிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும், வேலையில் ஒவ்வொரு அசைவும், விஞ்ஞானத்தின் ஒவ்வொரு கருத்துப் படிவமும் கடந்த எல்லாத் தலைமுறைகளினுடைய அநுபவங்களினின்றும் ஒருங்கு சேர்க்கப்பட்டவையாகும்.

கடந்த கால மக்களின் வாழ்க்கை அனுபவங்கள் மொழியில் செறித்து வைக்கப்பட்டுள்ளன. அதே சமயம் மொழியும் மக்களின் வாழ்க்கையில் இரண்டற கலந்து காணப்படுகிறது. தமிழின் தோற்றத்தை அறிய வேண்டுமானால் தமிழ் மக்களின் சமூக வாழ்வை ஆய்வுக்கு உட்படுத்தும் பொழுது அறியலாம்.

ஒரு காலத்தில் ஒரு சொல் ஏற்ற பொருள் மற்றொரு காலத்தில் வேறு ஒன்றாக மாறி இருப்பதை அறியமுடிகிறது. மேலும், அம்மொழியின் சொற் தொகுதியும் மாற்றம் கண்டுள்ளது. இம் மாற்றங்கள் மொழி மற்றும் சமூகத்தின் வளர்ச்சியைப் பறைசாற்றி நிற்கின்றன.

ஒரு காலத்தில் இருந்த சொல்வழக்கு மற்றொரு காலத்தில் இல்லாமல் போவதை இவைகள் தெரிவிக்கின்றன. பேசுகின்ற மக்கள் எப்படி மதிக்கின்றார்களோ, அப்படித்தான் சொல்லும் வழங்குகிறது. மக்கள் எதை மதிக்கவில்லையோ, அது வழக்கில் இல்லாமல் போகிறது (Varadarajan, 1954).

மொழியில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களை, அகராதிகளைக் கொண்டு அறியலாம். சொற்களின் வளர்ச்சி சமூகப் புரிதலில் மனிதனை முன்னோக்கி நகர உதவுகிறது. ஒவ்வொரு புதிய சொற்களின் வரவும் அல்லது பழைய சொற்களின் பொருள் மாற்றமும் சமூக அறிதலின் பரப்பை விரிவு செய்கின்றன. மொழி மனித வாழ்வுக்குத் துணை புரிவது. மேலும், அது மனிதனை உள்ளிருந்து இயக்கும் ஆற்றல் வாய்ந்தது.

## பொருளாதாரம்

தமிழகத்தின் பொருளாதார நிலையைத் தமிழகக் காரணிகள் மட்டும் தீர்மானிப்பதில்லை. உலக அளவிலான காரணிகளும் சேர்ந்தே தீர்மானிக்கின்றன. தற்காலத்தில் எந்த நாடாக இருந்தாலும் அதன் பொருளாதார நடவடிக்கைகளை நிர்ணயிப்பது சந்தை ஆகும். உலகச் சந்தையை ஆதிக்கம் கொள்ளும் நாட்டின் மொழி எல்லா நாடுகளின் மீது திணிக்கப்பட்டு வருகிறது. இதனால் அந்தந்த பகுதி மொழிகள் சீர்குலைவுக்கு உள்ளாவதைக் காணமுடிகிறது.

## வேளாண்மை

தமிழகத்தின் முக்கிய தொழில் விவசாயம் ஆகும். ஆனால் விவசாயிகளின் நிலை தற்காலத்தில் மிகவும் பின்தங்கி இருப்பதைக் காணமுடிகிறது. இதற்காக தொடர்ச்சியான போராட்டங்கள் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இப்போராட்டங்களில் மொழியின் பங்கு உற்பத்தியில் அமைந்தது போல் வெகு இன்றியமையாததாக அமைகிறது. மேலும், இயற்கை முறைசார் விவசாயம் குறித்த விழிப்புணர்வும் அதிகரித்து வருகிறது.

## தொழில் துறை

பழங்கால பட்டறைத் தொழிலில் இருந்து வளர்ந்தது தொழில் துறை எனலாம். அடிப்படை மூலப் பொருட்களைப் பண்டங்களாக மாற்றும் செயல் இத்துறையின் மூலம் நடைபெறுகிறது. பட்டு முதல் பருத்தி வரை அனைத்து வகை துணிகளும் இங்கு பண்டைக் காலம் தொட்டே செய்யப்பட்டு வருகின்றன. தமிழகத்தின் பட்டுத் துணிகள் ரோமாபுரிக்கு ஏற்மதி செய்யப்பட்டுள்ளன. தற்காலத்தில் நெசவாளர்களின் நிலையும் விவசாயிகளின் நிலையை ஒத்து காணப்படுகின்றன. மோட்டார் வாகனங்கள் அதிக அளவில் தயாரிக்கப்படும் இடமாகவும் தமிழகம் உள்ளது. இதனைப் பின்வரும்

நாளிதழ் செய்தி விரிவாக விளக்குகிறது. பெரு வளர்ச்சி பெற்ற துறைகளில் உற்பத்தி பகுதியில் பணிபுரிவோர் அனைவரின் தொடர்பு மொழியாக இருப்பது தமிழாகும்.

மேலும் விலை உயர்ந்த மின் சாதனப் பொருட்களான கணினிகள், தொடுதிரை கைபேசிகள், மடிக் கணினிகளின் உற்பத்தியும் கணிசமான அளவுக்கு அதிகரித்து வந்துள்ளன. இது போன்ற தொழில் துறை வளர்ச்சியில் தமிழ் மொழியே முக்கிய பங்காற்றுகிறது.

## சேவைத் துறை

தொழில் துறையின் வளர்ச்சிக்கு ஒத்திசைவாக நடைபெறும் தொழில்கள் அனைத்தும் சேவைத் துறை எனப்படுகின்றன. அரசு நிறுவனங்கள், மருத்துவமனைகள், வங்கிகள், பொருட்கள் பரிவர்த்தனை, தொலை தொடர்பு பணிகள், காப்பீட்டு நிறுவனங்கள், மென் பொருள் வடிவமைப்பு போன்றவை சேவைத் துறையைச் சேர்ந்தவையாக உள்ளன. வெளி நாட்டு கம்பெனிகளில் பணிபுரியும் தமிழர்கள் சிறந்த மென்பொருள் வல்லுநர்களாகவும் வன்பொருள் வல்லுநர்களாகவும் இருந்த போதிலும், அவர்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும் வகையில் தமிழக சூழல் இல்லை என்ற நிலை காணப்படுகிறது. தொழில்துறை, வேளாண்துறை, சேவைத் துறை என எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி கண்டுள்ளது தமிழகம். இவ்வளர்ச்சி எல்லா மக்களையும் சென்று சேரும் வகையில் அமைய வேண்டும். அதற்குத் தமிழ் மொழி துணை நிற்கும்.

## படைப்பு

மொழியுடன் ஒரு முக்கியமான நெருக்கத்தைக் கொண்டிருக்கக் கூடியவை இலக்கியங்கள் ஆகும். புற உலகில் செம்மையான வகையில் வினையாற்றும் பேச்சு மொழிக்கு இணையாக, அக உலகில் அதாவது மனிதர்களின் மன வளர்ச்சியை வளர்ப்பதில் பெரும் பங்கு வகிப்பவை எழுத்து மொழியான இலக்கியங்களாகும். குழப்பம், பதட்டம், வெறுமை, பயம், குரோதம் நிறைந்த படைப்புகள் எழுத்துலகில் அதிகம் காணக் கிடைக்கின்றன. வெகுஜன ஊடகமான திரைப்படத்திலும் இதே நிலை நீடிக்கிறது. இருப்பினும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நம்பிக்கையை விதைக்கக் கூடிய படைப்புகள் வெளிவந்த வண்ணம் இருப்பது நம்பிக்கை அளிப்பதாய் உள்ளது.

## தாய்மொழிக் கல்வி

மொழி கல்வியோடு மிக நெருங்கிய தொடர்புடையது. பல நாடுகள் தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமை உணர்ந்து செயல்பட்டு வருகின்றன. ஆனால் இந்த விஷயத்தில் தமிழகம் மிகவும் பின்னடைவில் உள்ளது. தாய் மொழிக் கல்வி ஏளனமாகப் பார்க்கப்படும் சூழல் உருவாக்கப்பட்டு விட்டது. கல்வி என்பது மனிதர்களைச் சிந்திக்க செய்ய வேண்டும். அப்படியானால் அது தாய்மொழிக் கல்வியாக இருக்க வேண்டும். மொழி பழைய காலகட்டத்தின் குறைகளைக் களைந்து புதிய காலகட்டத்தைப் படைக்க உதவுவதன் மூலம் மட்டுமே தன்னையும் தான் உருவாக்கிய சமூகத்தையும் காக்கும். அதற்குத் தாய் மொழிக் கல்வி இன்றியமையாததாகும்.

## முடிவுரை

சமூகமானது தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள உருவாக்கிக் கொண்டது மொழியாகும். அம்மொழி தன்னை உருவாக்கிய மக்களுக்கிடையிலான உறவைப் புலப்படுத்துகிறது. மேலும் மொழி, உழைப்பின் கொடை என்பது அறியப்பட்டது. மாற்றத்திற்கு உள்ளான மொழி தன் பங்கிற்கு தன் சமூகத்தையும் மாற்றம் கொள்ள செய்கிறது. மொழியின் அடிப்படை அலகாகிய சொல் விரைவாக மாறும் தன்மையுடையது. மக்கள் தங்களது தேவைக்கு ஏற்ப சொற்களை இழந்தும், ஏற்றும், பொருள் மாற்றத்திற்கு உட்படுத்தியும் வந்துள்ளனர். ஒரு சமூகத்தின் அடிப்படை இயக்கம் பொருளாதார நடவடிக்கையாகும். தமிழ்ச் சமூகத்தின் பொருளாதார நடவடிக்கைகளில் பெரிதும் பயன்படுத்தப்படும்

 DOI: 10.34256/irjt224s2177

மொழி தமிழ் மொழி என்பது சுட்டப்பட்டுள்ளது. தற்கால ஊடகங்கள், படைப்பிலக்கியங்கள் தம் பணிகளைச் சிறப்பாக செய்யும் பட்சத்தில் தமிழ் நல்லதொரு சமூக மாற்றத்திற்கு உதவும் என்பது விளக்கப்பட்டுள்ளது. கலை இலக்கியங்களிலும் தமிழ் தன் முழு வீச்சோடு செயல்பட முடியாமைக்குக் காரணம் பெரும்பான்மை தமிழக மக்களின் ஆதரவு தமிழ்க் கலை இலக்கியங்களுக்குக் கிடைக்கவில்லை. அது ஒரு குறிப்பிட்ட சில அறிவாளிகளின் வழிபாட்டுப் பொருளாகி உள்ளது. பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் துயர்துடைக்கும் இலக்கியங்கள் உருவாக்கப்பட்டு அவ் உழைப்பாளிகளிடம் கொண்டு செல்லப்பட்டால்தான் அவை வளர்வதற்கான வாய்ப்புண்டு என்பது விளக்கப்பட்டது.

## References

Firaterik Engels, (2005) Manitha Kurangu Manithanaga Maariyathil Uzhaipin Paathiram, Bharathi Puthakalayam, Chennai, India.

Lenin, V.E., (2017) Desiya Inap Prechanaigalum Pattali Varkka Sarvadesiyavathamum, Aazhi publication, Chennai, India.

Suryanarayana Sastri, (2003) Tamil Moliyin Varalaru, International Institute of Tamil Studies, Chennai, India.

Varadarajan, M. (1954) Mozhi varalaru, Paari nelaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License